TAMIL NADU LEGISLATURE LIBRARY
25 NOV 1982
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1982 மார்ச் 19 ஆம் நாள்

(பங்குனி 6, துன்மதி, திருவள்ளுவர் ஆண்டு—2013)

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

,,வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.''

தொழிலாகிய குறையைச் செய்யாமல் கைவிட்டவரை உலகம் கைவிடும். ஆகையால் தொழிலில் முயற்சி இல்லா திருத்தலை ஒழிக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாடு சிறப்புக் காவலர்கள் பணி.

* வினா எண் 548—திரு ரா. கிருஷ்ணன், திரு குமரி அனந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறப்புக் காவலர்கள் தொடர்ந்து 15 ஆண்டுகள் வரை பணியாற்றுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அவர்களின் பணி 5 ஆண்டுகள் முடிந்தவுடன் ரிசர்வ் போலீசாகவும் பின்னர் லோக்கல் போலீசாகவும் பணியாற்ற வகை செய்ய வேண்டுமென அரசிடம் கோரிக்கை உள்ளதா?

(இ) அதன்மீது அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ), (ஆ) மற்றும் (இ) ஆயுதப்படைக்கு மாற்றம் பெற 17 ஆண்டுகள் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணி புரிந்திருக்க வேண்டும் என்ற விதியினை 10 ஆண்டுகள் பணி புரிந்திருந்தால் போதுமானது என்று மாற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

[1982 மார்ச் 19

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 17 ஆண்டுகளாக பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்தச் சிறப்புக் காவலர்கள், ரிசர்வ் போலீஸ் அல்லது லோகல் போலீசுக்கு வர விரும்பினால் அவர்களால் வர முடியவில்லை. சிலர் வேண்டியவர்கள் யாராவது இருந்தால் அவர்களைப் பிடித்து வந்துவிடுகிறார்கள் இல்லாதவர்கள் வரவே முடிவதில்லை. ஆகவே அந்தப் பணியில் 10 ஆண்டுகளாக இருப்பவர்களுக்கு 10 ஆண்டுகளுக்குள் ரிசர்வ் போலீஸ் பதவிக்கு மாற்றம் பெறத் தக்க வகையில் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலிருந்து மாவட்ட ஆயுதப் படைக்கு மாற்றம் பெற விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆயுதப்படையில் 20 சதவீதம் பதவிகளில் சிறப்புக் காவல் படையினர் நியமிக்கப்படுகிறார்கள். ஏற்கெனவே அப்படி அவர்களை 17 ஆண்டுகளுக்குப் பிறகுதான் சேர்க்கப்படவேண்டும் என்று இருந்தது. இப்போது 10 ஆண்டுகளுக்கு பணிபுரிந்திருந்தால் சேர்க்கப்படுவார்கள். அதிலே எவ்வளவு இடம் இருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் அவர்கள் சேர்க்கப்படுகிற சூழ்நிலை ஏற்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அந்தக் காவலர்களுக்கு பதவி மாற்றத்தைப் பொறுத்தவரையில், வேறு சில மாநிலங்களில், நான் கேள்விப்படுவதைப்போல, எஸ். ஏ. பி, எனப்படும் போலீஸ் துறையில் 2, 3, 5 ஆண்டுகளுக்கு பணி புரியவும் அதற்குப்பிறகு, அதே நபர்கள் ரிசர்வ் போலீசில் 5 ஆண்டுகளுக்கு இருக்கும்படியாகவும், அதற்குப் பின்னால் அவர்களாகவே லோக்கல் போலீசுக்கு வரக்கூடிய ஏற்பாடும் இருக்கிறதே, அதை தமிழக அரசும் மேற்கொள்ள முயற்சி எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மற்றைய மாநிலங்களைப் பொறுத்து என்ன நிலைமைகள் இருக்கின்றன என்ற விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால் அவைகள் எல்லாம் ஆராயப்படவேண்டும்.

காவல் துறையில் மாவட்டக் காவல் பிரிவு, நகரக் காவல் பிரிவு, மாவட்ட ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை என்று 3 பிரிவுகள் உள்ளன. மாவட்டக் காவல் பிரிவையும் நகரக் காவல் பிரிவையும் உள்ளூர்க்காவல் பிரிவு என்றும் சொல்லப்படுகிறது. மாவட்டக் காவலர்களும், நகரக் காவலர்களும், சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் போக்குவரத்தை ஒழுங்கு செய்தல் ஆகிய பணிகள் செய்வார்கள். மாவட்ட ஆயுதப்படை காவல் பணிகள் மற்றும் அவசர காலத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்

1982 மார்ச் 19]

படும். தமிழ்நாடு சிறப்புக் காவல் படைகள் அவசரக்காலத் தேவைகளுக்கும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க ஒரு குறிப்பிட்ட காலத்தில் தேவைப்படும்போதும் பயன்படுத்தப்படும். மாவட்டக் காவலர்களும், மாவட்ட ஆயுதப் படை காவலர்களும் ஒரே மாதிரியான தொகுதிகளின் கீழ் நியமனம் செய்யப்படுகின்றனர் ஆனால் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் தனியான பணி விதி தொகுதிகளின்கீழ் நியமனம் செய்யப்படுகின்றனர். மாவட்டக் காவல் துறையின் நியமனம் பெற கல்வித் தகுதி எட்டாவது அல்லது பத்தாவது வரை படித்து இருக்க வேண்டும். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் காவலராக நியமனம் பெற கல்வித் தகுதி, தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கவேண்டும், என்றிருக்கிறது. இப்படிப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில்தான் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுதப்படையில் சேர்க்கப்படுவதற்கு தகுதியிருக்கிறது. அதிலும் எவ்வளவு பேர்களுக்கு கொடுப்பதற்கு இடம் இருக்கிறதோ அந்த அடிப்படையில்தான் சேர்க்க முடியும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் காவலர்களுக்கு 15 ஆண்டுகள் ஆகியும் சட்டம் ஒழுங்கு பிரிவில் வேலை பார்க்கவேண்டும் என்று கேட்கிற போது அது அவர்களுக்கு கிடைப்பதில்லையே, ஏதாவது அதற்கு விதியிருக்கிறதா? அப்படியிருந்தாலும் தொடர்ந்து 15 ஆண்டுகளாக சிறப்புக் காவலர்களாக பணிபுரிந்தவர்களை சட்டம் ஒழுங்குப் பிரிவிலே சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதலிலேயே நான் குறிப்பிட்டேன். 17 ஆண்டுகள் அதிலே பணிபுரிந்தவர்களை ஆயுதப்படைக்கு மாற்றம்செய்யலாம் என்று இருந்ததைத்தான் 10 ஆண்டுகளே அவர்கள் முடித்தாலே போதும் என்று மாற்றியிருக்கிறோம். ஆனால் அப்படி முடித்தவர்கள் அத்தனைப்பேரையும் சேர்த்துக் கொள்வது என்றால் ஆண்டுக்கு ஆண்டு அந்த ஆயுதப்படையை நாம் மிகப் பெரிய அளவில் விரிவு படுத்தவேண்டியிருக்கும். ஆகவே கிடைக்கக்கூடிய காலியிடங்களுக்கு ஏற்ப மூப்புநிலை அடைந்ததை யொட்டி அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோக்கல் போலீசிலே காலி இருக்கின்ற இடங்களில் 20 சதவீதத்தை சிறப்பு காவல் துறையினருக்கு ஒதுக்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், காலி ஆகின்ற இடங்களை இவர்களுக்குக் கொடுத்துவிட்டு மீதி இடங்களைப் பொறுத்தவரையிலே புதிதாக நியமனம் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினருக்கு வழங்கப்பெறும் ஓய்வூதியம்.

*வினா எண் 549—திரு. க. பாரமலை : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினருக்கு வழங்கப் படும் மாத ஓய்வூதியம் (பென்சன்) ரூபாய் 75-ஐ சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு வழங்குவது போல உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினருக்கு ஓய்வூதியம் (பென்சன்) ரூபாய் 75 முன்பு வழங்கப்பட்டது. பின்பு ரூபாய் 100 ஆக அரசாணை எண் 867, பொது (அரசியல்-அ.) துறை, நாள் 7—5—1981 மூலம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. தற்போது 1—8—1981 முதல் ரூபாய் 150 ஆக அரசாணை எண். 1474, பொது (அரசியல்-அ) துறை, நாள் 29—7—1981 மூலம் மேலும் உயர்த்திக் கொடுக்கப் பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, வீர பாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டிய சகோதரர்கள், புரட்சிக் கவிஞர் பாரதியார் போன்றவர்களின் சேவையைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஓய் ஆதியம் கொடுப்பதோடு அந்த சந்ததியினருக்கு தகுதியான வேலைவாய்ப்புக்களை அதாவது அரசுப்பணிகளைக் கொடுத் தால் அதன் மூலம் அவர்களால் வயிறார உண்ண முடியாவிட்டா லும் பசியார உண்ணவாவது வழி ஏற்படுமல்லவா ? ஆகவே அதை அரசு கருத்தில் கொண்டு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வீர பாண்டிய கட்டபொம்மன் சந்ததியினருக்கு முன்பு 75 ரூபாய் கொடுக்கப்பட்டது, அது 100 ரூபாயாக உயர்த் தப்பட்டு பிறகு 150 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதைப் பொறுத்தவரை யிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அவர்களுக்கு எந்த அளவுக்குத் தகுதி திறமை இருக்கின்ற அதன் அடிப்படையிலே கொடுக்க இயலுமா என்று அதற்காக முயற்சி செய்யப்படுகின்றது.